**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உத்தமபாளையம்.**
முன்னிலை – திரு.P. காமராசு, B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.
**2026 ஏப்ரல்–16–ம் நாள் வியாழக்கிழமை**
2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் சித்திரை–03–ம் நாள்
**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.164/2022**

**CNR.No.TNTH07-007006-2022**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், உத்தமபாளையம் காவல் நிலையம், குற்ற எண்.169/2022. |
| // எதிர் // | | |
| எதிரி | – | முத்து (வயது 35/2022),<br>த/பெ.சந்திரன்,<br>பாண்டியன் தெரு, பெருங்குடி, அம்பேத்கர் புரட்சி நகர், சென்னை. |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதச–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதச–ன் கீழ் |
| தீர்மானம் | – | எதிரியின் மீது இதச பிரிவுகள் 279, 304(A) (2 counts)–ன் கீழ் குற்றவாளி என குவிமுச 248(2) ன் படி முடிவு செய்து உத்தரவிடப்படுகிறது. |
| தண்டனை விபரம் | – | முடிவாக, எதிரிக்கு 279 இதசவிற்கு ரூ.1,000/– அபராதம் மட்டும் விதித்தும், 304(A) இதசவிற்கு 1 count க்கு 1 வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.3,000/– அபராதம் விதித்தும், 304(A) இதசவிற்கு மற்றொரு count க்கு 1 வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.3,000/– அபராதம் விதித்தும் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராத தொகையான ரூ.7,000/– செலுத்த தவறும் பட்சத்தில், எதிரிக்கு மேலும் 3 மாதம் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. தண்டனையை |

| | | |
|---|---|---|
| | | ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி இந்த வழக்கில் ஏற்கனவே சிறையில் இல்லை. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. |

இவ்வழக்கானது 28.09.2022–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணையின் போது, குற்றம் முறையிடுபவர் தரப்பில், அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2, உத்தமபாளையம் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சடமாயன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சி, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**தீர்ப்புரை**

**இறுதியறிக்கையின் சுருக்கம்**

1) கடந்த 29.05.2022ம் தேதி கோம்பையில் உள்ள அம்மாவை பெற்ற அம்மா பாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று அவரை பார்த்து வர விக்கி என்ற விக்னேஷ் தனது அம்மா செல்வியை தனது TN 60 BZ 7652 என்ற பதிவெண் கொண்ட பைக்கில் அமர வைத்து சுமார் மாலை 07.45 மணிக்கு கூடலூாரில் இருந்து புறப்பட்டு, கோம்பை சென்று தனது பாட்டியை பார்த்துவிட்டு திரும்ப கூடலூாருக்கு வருவதற்காக உத்தமபாளையம் – கம்பம் பைபாஸ் ரோட்டில் அனுமந்தன்பட்டி ஆண்டாள் பேக்கரிக்கு எதிரே ரோட்டின் நடுவில் அமைந்துள்ள தடுப்புக்கு வலது பக்கம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது, சுமார் 22.30 மணிக்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN 07 CT 7732 என்ற வண்டியில் சுற்றுலா பயணிகளை ஏற்றி வந்து கொண்டிருந்த எதிரி, விக்கி என்ற விக்னேஷ் கொடுத்த கமிக்கையை கவனிக்காமல் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் தனது வாகனத்தை ஓட்டி பைக் மீது மோதி ஏற்பட்ட விபத்தில் விக்னேஷ்க்கு வலது பக்க காது மற்றும் தலையில் ரத்தக்காயம், வலது பாதத்தில் வீக்க காயங்களும், செல்விக்கு முகத்தின் வலது பக்கம் முழுவதும் வீக்க காயமும், வலது முன்னங்காலில் ரத்தக்காயங்கள் ஏற்பட்டு இறப்பை ஏற்படுத்திய எதிரியின் செயல் ச/பி 279, 304(A) இதச–ன் கீழ் உத்தமபாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி இறுதியறிக்கையை பரிசீலனை செய்து, இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் குவிமுச 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, மேலும் ச/பி 279, 304(A) இதச–கீழ் குற்றச்சாட்டுகள் குவிமுச பிரிவு 240(1)–ன் படி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3) எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்க, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் இல்லை.

<u>4) அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்று ஆவணங்களின் படி வழக்கு சுருக்கம்–</u>

4.1) எதிரி மீதான குற்றச்சாட்டுகளை பொறுத்து, அ.சா.1 சக்திகுமார் தனது சாட்சியத்தில், கடந்த 29.05.2022ம் தேதி தனது அம்மா செல்வி, தனது அண்ணன் விக்னேஷ்ம் வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு வரும் போது, இரவு 10.45 மணியளவில் கோம்பையிலிருந்து திரும்பி வரும் போது, டிஎன் 60 AY 7652 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தில் சென்றார்கள். தனது அண்ணன் போன் நம்பரிலிருந்து போன் வந்தது அருகில் இருந்த நபர்கள் போன் செய்து, அனுமந்தன்பட்டி பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட்டு வரும் போது, டூரிஸ்ட்டு பஸ் எண் பின்னர் தெரிந்து கொண்டேன். TN 07 CT 7733 ஆகும். தனது அண்ணன் பைக் மீது மோதி விபத்து ஏற்பட்டு உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு தனது அண்ணன் இறந்துவிட்டார். தனது அம்மாவிற்கு காலில் இரத்த காயம் இருந்தது. அவரை க.விலக்கு மருத்துவமனைக்கும், மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கும் சிகிச்சைக்கு கொண்டு சென்றேன். மறுநாள் தனது அம்மா இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரை பற்றி விசாரித்த போது, சென்னையை சேர்ந்த முத்து த.பெ. சந்திரன் என கூறினார்கள். உத்தமபாளையம் காவல் நிலையத்தில்

2 நாட்கள் கழித்து தன்னை அழைத்து விசாரித்த போது, மேற்படி ஓட்டுநரும் அங்கு இருந்தார். புகார் தான் சொல்ல சொல்ல தனது உறவினர் வந்து புகார் எழுதினார். என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.2) அ.சா.2 ஜெயந்தி தனது சாட்சியத்தில், கடந்த 29.05.2022–ம் தேதி அனுமந்தன்பட்டி ஆஞ்சநேயர் கோவில் அருகே தான் பழக்கடை வைத்துள்ளேன். அன்றைய தினம் இரவு 10.30 மணியளவில் தான் கடையில் இருந்த போது, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி Splender இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் இண்டிகேட்டர் போட்டு வந்து கொண்டிருந்தார்கள். தெற்கிலிருந்து வந்த ஈச்சர் வாகனம் மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் அந்த இடத்திலேயே கீழே விழுந்து பலத்த காயம் ஏற்பட்டு கிடந்தார். பின்னால் அமர்ந்து வந்த பெண்மணி தனது கடையின் முன்னே சுருண்டு கீழே கிடந்தார். அவருக்கு முகம், கால் வீக்க காயம் ஏற்பட்டிருந்தது. இருவரையும் ஆம்புலன்ஸ் மூலம் உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வாகனத்தை ஓட்டி வந்து ஓட்டுநர் ஆஜர் எதிரி தான். மேற்படி வாகனங்களையும் பதிவெண் தான் கவனிக்கவில்லை என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.3) அ.சா.3 ராஜிவ்கண்ணா தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான். கடந்த 30.05.2022–ம் தேதி நான் காலை 07.00 மணியளவில் அனுமந்தன்பட்டி ஆஞ்சநேயர் கோவில் அருகே உள்ள ஆண்டாள் டீ கடையில் தான் இருந்தபோது, போலிசார் அங்கு வந்து விபத்து வழக்கு சம்மந்தமாக வரைபடம் வரைந்தார்கள் அதில் சாட்சியாக தானும், முத்து என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.4) அ.சா.4 செல்வகுமார் தனது சாட்சியத்தில், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 29–ம் தேதி 5–வது மாதம் இரவு 09.30–10.00 மணியளவில் தான் அனுமந்தன்பட்டியில்

உள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகே உள்ள கூரை கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்த போது, கம்பம்–உத்தமபாளையம் நோக்கி Splender இருசக்கர வாகனத்தில் ஒரு நபர் ஓட்டி வந்தார். அவருக்கு பின்னால் ஒரு பெண்மணி அமர்ந்திருந்தார். உத்தமபாளையம்– கம்பம் நோக்கி வந்த ஈச்சர் Max Cap வாகனம் அதிவேகமாக வந்து வலது புறமாக ஏறி வந்து மேற்படி Splender இருசக்கர வாகனத்தை மோதி விபத்து ஏற்பட்டது. டம் என்று சத்தம் கேட்டவுடன் தான், முத்து, கடைக்காரர் ஓடிச்சென்று, இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை தூக்கி பார்த்தோம். முகத்தில் காயம் இருந்தது, பின்னால் அமர்ந்து வந்த பெண்ணுக்கும் முகத்தில் காயம் இருந்தது, இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை குறித்து விசாரித்த போது கூடலூரை சேர்ந்த விக்கி என்றும், பின்னால் அமர்ந்து வந்த பெண்ணின் பெயர் செல்வி என தெரியவந்தது. ஈச்சர் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் இறங்கி வந்தார். அங்கே இருந்த நபர்கள் அந்த ஓட்டுநரிடம் விசாரித்த போது அவரது பெயர் முத்து என கூறினார். பின்னர் காயம்பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். ஈச்சர் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் ஆஜர் எதிரி இல்லை என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.5) அ.சா.5 சுந்தரராமன் தனது சாட்சியத்தில், தான் தற்போது உத்தமபாளையம் வட்டார கோட்டா வாகன ஆய்வளர் நிலை–II ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.06.2022 ம் தேதி 15.40 மணிக்கு தான் பணியில் இருந்த போது உத்தமபாளையம் காவல்நிலைய குற்ற எண் 169/22 இதச பிரிவு 279, 337, 304(A) வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 60 BZ 7652 Hero Honda Splender plus வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டி வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று 01.06.2022 ம் தேதி அலுவலகத்தில் வைத்து மேற்படி வாகனத்தை ஆய்வு செய்து, வாகனத்தின் சேதத்தையும், நிலையையும் குறிப்பு எடுத்து மேற்படி விபத்தானது இயந்திர கோளாரினால் ஏற்படவில்லை என அறிக்கை வழங்கினேன். கடந்த 01.06.2022 ம் தேதி 15.55 மணிக்கு தான் பணியில் இருந்த போது உத்தமபாளையம் காவல்நிலைய குற்ற எண் 169/22 இதச பிரிவு 279, 337, 304(A) வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 07 CT 7732 Eicher வாகனத்தை ஆய்வு செய்து

அறிக்கை தரவேண்டி வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று 01.06.2022 ம் தேதி அலுவலகத்தில் வைத்து மேற்படி வாகனத்தை ஆய்வு செய்து, வாகனத்தின் சேதத்தையும், நிலையையும் குறிப்பு எடுத்து மேற்படி விபத்தானது இயந்தி கோளாரினால் ஏற்படவில்லை என அறிக்கை வழங்கினேன் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.6) அ.சா.6 சிலைமணி தனது சாட்சியத்தில், நான் கடந்த 30.05.2022–ம் தேதி உத்தமபாளையம் காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது, உத்தமபாளையம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் இப்ரீம் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் இருந்த வந்த தகவலை பெற்று அங்கு சென்று விபத்தில் இறந்து போன விக்னேஷ் என்பவரின் தம்பி சக்திகுமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நிலைய குற்ற எண். 169/22 இதச பிரிவு 279, 337, 304(A) ஆக வழக்கு பதிவு செய்து. வழக்கு கோப்பினை விசாரணைக்காக தன்னிடம் சமர்ப்பித்தார். தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 06.00 மணிக்கு சம்பவம் இடம் பார்வையிட்டு சாட்சிகள் முத்து, ராஜீவ்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்று விபத்தில் இறந்த நபரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்பு இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சிகள் சக்திகுமார், ஜெயந்தி, செல்வகுமார், ராஜீவ்கண்ணன், முத்து, மாரியப்பன், லெட்சுமணன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தலைமை காவலர் தாமரை மாணிக்கம் என்பவர் மூலம் உடற்கூறாய்வுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன்.

4.7) 30.05.2022–ம் தேதி 14.35 மணிக்கு இவ்வழக்கில் காயம்பட்டு மேல்சிகிச்சைக்கு சென்றிருந்த செல்வி என்பவர் சிகிச்சை பலனிற்றி இறந்துவிட்டார் என தகவல் கிடைத்த பின்பு வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவு 279, 337, 304(A) இருந்து இதச பிரிவு 279, 304(A) (2 Counts) ஆக மாறுதல் செய்தேன். பின்பு 31.05.2022–ம் தேதி காலை 11.00 மணிக்கு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில்

பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பெண் முதல் நிலை காவலர் மணிமேகலை என்பவர் மூலம் உடற்கூறாய்வுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். 01.06.2022–ம் தேதி 14.45 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். வழக்கில் சம்மந்தப்பட்ட TN 07 CD 7732 என்ற பதிவெண் கொண்ட Maxi Cape Van மற்றும் TN 60 BZ 7652 Hero Honda Splender இருசக்கர வாகனத்தையும், தனித்தனி வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சுந்தரராமன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன். பின்னர் இறந்து போன விக்னேஷ் என்பவருக்கு பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திரு.வேதமூர்த்தி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, சான்றிதழ் பெற்றேன். பின்னர் இறந்து போன செல்வி என்பவருக்கு பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திரு.இளவேனில் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, சான்றிதழ் பெற்றேன். தலைமை காவலர் தாமரை மாணிக்கம், மணிமேகலை சிறப்பு சார்பு ஆய்வாளர் இபுரீம் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி மீது வழக்கு விசாரணை முடித்து 25.07.2022ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

5) அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்ட பிறகு, வழக்கில் எதிரிக்கு எதிராக உள்ள அரசு தரப்பு சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் கேள்வி கேட்டபோது, எதிரி அவை பொய் சாட்சிகள் என்றும், தனது தரப்பில் சாட்சி இல்லை என்றும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**<u>7) வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள்:-</u>**

**(i) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

**(ii) அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருந்தால் எதிரிக்கு வழங்க கூடிய தண்டனை விபரம் என்ன?**

7.1) அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சக்திகுமார் தனது சாட்சியத்தில், கடந்த 29.05.2022ம் தேதி தனது அண்ணன் விக்னேஷ் என்பவர் TN 60 AY 7652 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்ட, அதில் அம்மா செல்வி பின் அமர்ந்து கோம்பையிலிருந்து வரும்போது, அனுமந்தன்பட்டியில் உள்ள பெட்ரோல் பல்க்கில் பெட்ரோல் நிரப்பிவிட்டு, வரும்போது TN 02 CT 7733 என்ற பதிவெண்ட கொண்ட சுற்றுலா வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தனது அண்ணன் செல்போனில் இருந்து தகவல் கிடைத்தது என்றும், விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தனது அண்ணன் விக்னேஷ் இறந்துவிட்டதாக உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் சொன்னார்கள் என்றும், தனது அம்மாவிற்கு காலில் ரத்த காயம் இருந்தது என்றும், தனது அம்மா மேல் சிகிச்சைக்காக தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அங்கிருந்து மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி தனது அம்மா இறந்துவிட்டார் என்றும் சொல்லியுள்ளார். மேலும், விபத்து குறித்து புகார் அளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.2) அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள ஜெயந்தி என்பவர் தனது சாட்சியத்தில், அனுமந்தன்பட்டி ஆஞ்சநேயர் கோவில் அருகே பழ வியாபாரம் செய்து வருவதாகவும், கடந்த 29.05.2022ம் தேதி வியாபாரத்தில் இருந்தபோது, வடக்கு – தெற்கு நோக்கி இருசக்கர வாகனத்தில் ஒரு ஆண் ஓட்ட, ஒரு பெண் பின் அமர்ந்து வந்தார்கள் என்றும், அந்த இருசக்கர வாகனம் தனது வண்டியில் உள்ள சைகைஒலி (இன்டிகேட்டர்) செய்து கொண்டு வந்து கொண்டிருந்தபோது, தெற்கு – வடக்கு நோக்கி வந்த நான்கு சக்கர வாகனம், அந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என்றும், அதனால் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர்

பலத்த காயத்துடன் கீழே விழுந்து கிடந்தார் என்றும், பின் அமர்ந்து வந்த பெண் தனது கடையின் முன்னே சுருண்டு விழுந்தார் என்றும், அவருக்கு முகம், கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டதென்றும், இருவரையும் ஆம்புலன்ஸ் மூலம் உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும் சொல்லியுள்ளார். மேலும், எதிரியை அடையாளப்படுத்தியும் சாட்சியமளித்துள்ளார்.

7.3) கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்ட "டம்" என்று சத்தம் கேட்டு திரும்பி பார்த்தாரா என்ற வினாவிற்கு சரியல்ல என பதிலளித்தும், எதிரியை முதல் முறையாக இந்நீதிமன்றத்தில் பார்க்கிறாரா என்ற வினாவிற்கு சம்பவ இடத்திலேயே பார்த்ததாக தெளிவாக சொல்லியுள்ளார். சம்பவ இடம் பார்வையிட்டு தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தது பற்றி அ.சா.3 சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 னை போலவே மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 செல்வகுமார் தான் விபத்தை பார்த்ததாகவும், விபத்தினால் இருசக்கர வாகனத்தில் பின் அமர்ந்து வந்த பெண்ணிற்கு காயம் ஏற்பட்டதென்றும், ஆம்புலன்ஸ் மூலம் உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு விபத்தினால் காயம்பட்ட இருநபர்களையும் அனுப்பி வைத்ததாகவும், எதிரியை சம்பவ சமயத்தில், சம்பவ இடத்தில் அடையாளம் கண்டுகொண்டதன் அடிப்படையில் அடையாளப்படுத்தியும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 ன் குறுக்கு விசாரணையில் எதிரி தரப்பில் அ.சா.4 ற்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றும், போலிசார் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியமளிக்கிறார் என்றும் Suggestion மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, அ.சா.2 ன் சாட்சியம் ஏற்புடையதாக அமைந்து விபத்து எதிரியின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டதென தெளிவுப்படுத்துகிறது.

7.4) மோட்டார் வாகன ஆய்வாளர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.3, அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளில் இயந்திர கோளாரினால் விபத்து ஏற்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டு, குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி அ.சா.6 சாட்சியமளித்துள்ளார். எதிரி

தரப்பில் அ.சா.1 தனது புகாரான அ.சா.ஆ.1ல் "எனது அண்ணன் மோதிய வாகனத்தின் ஓட்டுநர் பற்றி விசாரிக்க" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் விபத்தில் இறந்த நபரான விக்னேஷ் உரிய ஓட்டுநர் உரிமமின்றி வாகனத்தை இரவு நேரத்தில் கவனக்குறைவாக இயக்கி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், எதிரியின் கவனக்குறைவாலோ அல்லது அஜாக்கிரதையாலோ விபத்து ஏற்படுத்தப்படவில்லை என வாதிடப்பட்டது.

7.5) விபத்து எதிரியின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டதென்றும், இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் இன்டிகேட்டர் ஒலி எழுப்பிகொண்டு வந்தார் என்றும், எதிரியை அடையாளப்படுத்தியும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தெளிவாக சாட்சியமளித்துள்ளதால் இறந்த நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது அரசுத்தரப்பு வழக்கினை பாதிப்பதாக அமையாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, எதிரி மீதான இதச குற்றச்சாட்டிற்காக 279 மற்றும் 304(A) (2 counts) கீழ் குற்றவாளி என குவிமுச 248(2) ன் படி முடிவு செய்து இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எதிரியிடம் தண்டனை குறித்து கேட்டபோது:

**கேள்வி:- இவ்வழக்கில் உமக்கு அளிக்க இருக்கும் தண்டனை குறித்து உமது விளக்கம்?**

**எதிரி பதில்:- குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும்.**

எதிரியின் மேற்படி பதில், குற்றத்தின் தன்மை, எதிரியின் வயது, தொழில் ஆகியவற்றை கருத்தில் கொண்டு,

முடிவாக, எதிரிக்கு 279 இதசவிற்கு ரூ.1,000/- அபராதம் மட்டும் விதித்தும், 304(A) இதசவிற்கு 1 count க்கு 1 வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.3,000/- அபராதம் விதித்தும், 304(A) இதசவிற்கு மற்றொரு count க்கு 1 வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.3,000/- அபராதம் விதித்தும் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராத தொகையான ரூ.7,000/- செலுத்த தவறும் பட்சத்தில், எதிரிக்கு மேலும் 3

மாதம் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி இந்த வழக்கில் ஏற்கனவே சிறையில் இல்லை. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் இன்று 16.04.2026-ம் தேதி இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

**(Statement Under rule 106 of Criminal Rules of Practice)**

| | | |
|---|---|---|
| 1. | அரசு சார்பாக – காவல்நிலையம் குற்ற எண்: | அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், உத்தமபாளையம் காவல் நிலையம், குற்ற எண்.169/2022. |
| | **Description of the accused** | |
| 2. | பெயர் | முத்து (வயது 35/2022),<br>த/பெ.சந்திரன்,<br>பாண்டியன் தெரு, பெருங்குடி, அம்பேத்கர் புரட்சி நகர், சென்னை. |
| 3. | கணவர்/ தகப்பனார் பெயர் | -- |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | -- |
| 6. | வயது | -- |
| | **தேதிகள்** | |
| 7. | குற்ற நிகழ்வு | 29.05.2022 |
| 8. | புகார் நாள் | 30.05.2022 |
| 9. | கைது செய்யப்பட்ட நாள் | 01.06.2022 |
| 10. | பிணையில் வந்த நாள் | 01.06.2022 (காவல் நிலைய பிணை) |
| 11. | விசாரணை தொடங்கிய நாள் | 12.12.2022 |
| 13. | விசாரணை முடித்த நாள் | 10.04.2026 |

| | | |
|---|---|---|
| 14. | தீர்ப்பு விபரம், நாள் | 16.04.2026 (குற்றவாளி) |
| 15. | தீர்ப்பு நகல் | 16.04.2026 |
| 16. | காலதாமத்திற்கான விளக்கம் | --- |

**<u>வழக்கு சுருக்கம்</u>**

**<u>மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021– நாளிட்ட R.O.C.No.814/2020/RG/F1(P.Dis.No.36/2021)உத்தரவின் படி CASE SUMMARY கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.</u>**

| வ. எண் | விபரங்கள் | குறிப்புகள் |
|---|---|---|
| 1. | குற்ற நிகழ்வு நாள்:<br>புகார் நாள்: | 29.05.2022<br>30.05.2022 |
| 2. | குற்ற எண்:<br>காவல் நிலையம்: | அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், உத்தமபாளையம் காவல் நிலையம், குற்ற எண்.169/2022. |
| 3. | குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர் மற்றும் அல்லது கூடுதல் குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர்கள் எதிரிகளின் பெயர், வயது, | முத்து (வயது 35/2022),<br>த/பெ.சந்திரன்,<br>பாண்டியன் தெரு, பெருங்குடி, அம்பேத்கர் புரட்சி நகர், சென்னை. |
| 4. | எதிரி காவல் அடைப்பு நாள் | --- |
| 5. | எதிரி பிணையில் வெளியே வந்த நாள்(Ordinary Bail, Anticipatory Bail) | --- |
| 6. | குற்ற இறுதியறிக்கை நாள் | 25.07.2022 |
| 7. | வழக்கு தாக்கல் செய்த நாள் | 28.09.2022 |
| 8. | குற்றச்சாட்டு வனைந்த நாள் | 12.12.2022 |
| 9. | இடைக்கால மனுக்கள் விபரம் (Warrant Recall) | --- |
| 10. | எதிரி தலைமறைவு விபரம் | --- |
| 11. | மேல் நீதிமன்ற தடை உத்தரவு ஏற்பட்டிருந்தால் அதன் விபரம் | --- |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை விசாரித்த நாட்கள் | விசாரித்த நாட்கள் | | |
| | | அரசு தரப்பு சாட்சிகளின் எண்ணிக்கை | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1. | 12.06.2024 | 12.06.2024 |
| | | அ.சா.2. | 11.08.2025 | 11.08.2025 |
| | | அ.சா.3. | 11.08.2025 | 11.08.2025 |
| | | அ.சா.4. | 13.11.2025<br>12.02.2026 | 12.02.2026 |
| | | அ.சா.5. | 12.02.2026 | 12.02.2026 |
| | | அ.சா.6. | 27.03.2026 | 27.03.2026 |
| 13. | பிரிவு 313(1)(b) கேள்வி கேட்ட நாள் | 10.04.2026 | | |
| 14. | தாமத வழக்குகளின் விபரம்(Delay Reason) | --- | | |

## பிற்சேர்க்கை

**அரசு தரப்பு சாட்சிகள்–**

1. அ.சா.1 ... திரு.சக்திகுமார்
2. அ.சா.2 ... திருமதி.ஜெயந்தி
3. அ.சா.3 ... திரு.ராஜீவ்கண்ணா
4. அ.சா.4 ... திரு.செல்வகுமார்
5. அ.சா.5 ... திரு.சுந்தரராமன்
6. அ.சா.6 ... திரு.சிலைமணி (காவல் ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

1. அ.சா.ஆ.1 – 30.05.2022 ம் தேதியிட்ட புகார் வாக்குமூலம்
2. அ.சா.ஆ.2 – பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம்
3. அ.சா.ஆ.3 – TN 60 BZ 7652 என்ற இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை
4. அ.சா.ஆ.4 – TN 07 CT 7732 என்ற நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை
5. அ.சா.ஆ.5 – 30.05.2022 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை
6. அ.சா.ஆ.6 – பார்வை மகஜர்

7. அ.சா.ஆ.7 – வரைபடம்

8. அ.சா.ஆ.8 – விக்கி என்ற விக்னேஷ் பிரேத விசாரணை அறிக்கை

9. அ.சா.ஆ.9 – செல்வி பிரேத விசாரணை அறிக்கை

10. அ.சா.ஆ.10 – விக்கி என்ற விக்னேஷ் உடற்கூறாய்வு சான்றிதழ்

11. அ.சா.ஆ.11 – செல்வி உடற்கூறாய்வு சான்றிதழ்

12. அ.சா.ஆ.12 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**அரசு தரப்பு சான்று பொருள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–** இல்லை.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

**பின்குறிப்பு–**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது ஜாமினில் இருந்து வந்துள்ளார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கில் சொத்துக்கள் இல்லை.
4. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
5. எதிரி அபராதக் தொகை ரூ.7,000/– செலுத்தியுள்ளார்.
6. எதிரிக்கு எதிராக விதிக்கப்பட்ட தண்டனை MP:12/2026 நாள்.16.04.2026–ன் படி 16.05.2026 – ம் தேதி வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

// உண்மை நகல்//

KAMARASU P

Digitally signed by KAMARASU P
Date: 2026.04.16 20:12:47 +0530

நீதித்துறை நடுவர், உத்தமபாளையம்.